வழக்குகளில் அக்கறை எடுத்துக்கொண்டு தங்கள் திறமையைக் காட்டு வார்கள் என்று நம்புகிறேன்.

Formation of a road from Palani to Kodaikanal

* 802. *Q.*—**Srimathi A. S. PONNAMMAL (on behalf of Sri P. S. K. LAKSHMIPATHI RAJ)**: கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பழனியிலிருந்து கொடைக்கானலுக்கு ரோடு போடுவது சம்பந்த மாக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், எந்தப் பகுதி வழியாக ரோடு போடும் உத்தேசம் இருக்கிறது ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON: (*a*) & (*b*) The matter is under consideration.

Srimathi A. S. PONNAMMAL: இந்த மாதிரி கொடைக் கானலுக்கும் பழனிக்குமிடையே ரோடு போடுவதாயிருந்தால் அது எத்தனை மைல் தூரம் இருக்கும், அதற்கு சர்க்கார் எவ்வளவு பணம் செல வழிக்கும் ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON: இந்தக் குறுக்குப் பாதை 28 மைல் தூரம் இருக்கும். இதைப் போட 38 லட்ச ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

Srimathi A. S. PONNAMMAL: இந்த ரோடைப் போடும் வேலையை வெகு விரைவில் எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON: நான் முதலில் கூறியபடி இத்திட்டம் ஆலோசனையில் இருக்கிறது.

Headquarters Hospital, Vellore

* 803 *Q.*—**Sri S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. SARATHI)**: கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

வேலூர் தலைமை மருத்துவ நிலையத்தில் 1958-ல் சராசரி அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்கள் (In-patients) எவ்வளவு பேர் ?

The Hon. Sri M. A. MANICKAVELU: 420 per day, Sir.

Procurement of foodgrains

* 804 *Q.*—**Sri P. G. MANICKAM**: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ராஜாங்க உணவு தான்ய வர்த்தக திட்டத்தின் கீழ் தான்யக் கொள் முதல் செய்வதற்காக எந்தெந்த இடங்களிலிருக்கும் கூட்டுறவு சொசைட்டி களுக்கு சென்னை ராஜ்யத்தில் லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: The Government have decided to procure two lakhs tons of rice during the current harvest and the following co-operatives in the State have been appointed as procuring agents :—

(1) The District Co-operative Supply and Marketing Societies or the Co-operative Wholesale Stores in all the districts except Tanjore;

14th March 1959]

(2) The Tanjore District Co-operative Marketing Federation in Tanjore District; and

(3) The Triplicane Urban Co-operative Society in the City of Madras.

Sri P. G. MANICKAM : இப்போது குறிப்பிடப்பட்ட ஸொஸைடிகள் மூலம் எத்தனை டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நேற்று எனக்குக் கிடைத்த தகவல்படி இதுவரை 17,000 டன்னுக்கு மேலே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

Sri P. G. MANICKAM : நெல் கொள்முதல் செய்யப்படும் தாலூகாக்களிலும் அநேக கூட்டுறவு ஸொஸைடிகள் இருக்கின்றன. ஆகையால் அந்த ஸொஸைடிகளுக்கும் இந்த லைஸென்ஸ் கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் முன்பு குறிப்பிட்டது நெல் மாத்திரம் அல்ல, நெல்லும் அரிசியும். கோவாப்பரேடிவ் ரெஜிஸ்ட்ராருடனும் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களுடனும் கலந்தாலோசிக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்வது எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குமே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் தங்களுக்கு ஏஜெண்டுகளாக மற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

Mr. SPEAKER : இனிமேல் 9-ம் தேதியன்று ஒத்திபோடப்பட்ட கேள்விகளை எடுத்துக்கொள்வோம்.

Glass factories

*636 *Q*.—**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) நமது ராஜ்யத்தில் கிளாஸ் பாக்டரிகள் எங்கெங்கே நடைபெறுகின்றன ?

(ஆ) மேலும் நமது ராஜ்யத்தில் கிளாஸ் பாக்டரிகள் நடத்த ஏற்பாடுகள் ஏதேனும் உண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) There are glass factories in Salem and Attur in the Salem district, in Mettupalayam in the Coimbatore district and in Madras.

(*b*) Yes, Sir. There is a proposal for the establishment of a factory in the Industrial Estate, Guindy, for the manufacture of scientific and laboratory glassware, in the public sector. There are also proposals for the establishment of factories in the private sector, one in Madras for the manufacture of vacuum flasks, heat resisting glassware and scientific glassware and another near Madras for the manufacture of sheet-glass.

Sri V. K. KOTHANDARAMAN : கண்ணாடி செய்வதற்கான கனிப் பொருள்கள் வட ஆற்காடு ஜில்லாவில் வாலாஜா தாலூகாவில் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆகவே அவைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு அங்கே ஒரு கண்ணாடி தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : வட ஆற்காட்டில் அவை அகப்படுகின்றனவா என்று எனக்குத் தெரியாது. அதனால் அதைத் தெரிந்துகொண்டு அதற்குப் பிறகு இதைப்பற்றி யோசிக்கலாம்.